வகையில் சிறந்த முறையில் தமிழில் வரைவுகள் போன்றவை எழுது கிறவர்களைத் தேவைப்படுகிற துறைகளுக்கு மாற்றி அதன் மூலம் தமிழைப் பயிற்சிமொழியாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

திரு. இ. எஸ். தியாகராாசன் : எல்லாத் துறைகளிலும் தமிழில் நடவடிக்கைகள் நடைபெற இன்னும் எவ்வளவு காலமாகும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : காலவரையறையைச் சொல்ல இயலாது. எவ்வளவு விரைவில் கொண்டு வர இயலுமோ அவ்வளவு விரைவில் கொண்டுவர வேண்டும். அதிகாரிகளும் அதற் கேற்றவகையில் பழக்கப்படுத்தப்பட வேண்டியவர்களாக இருக் கிறார்கள். ஆரம்பக் கட்டத்தில் சில சங்கடங்கள் இருக்கக்கூடும். சில விதிமுறைகளை ஏற்படுத்தி ஒரு நடைமுறைக்குக் கொண்டு வந்தால், ஒரு முறையைக் கொண்டு வந்தால் இருநூறு, முன்னூறு ஆண்டுகள் அதன் தன்மை இருக்கும். இப்போது தாலுகா ஆபீஸ் களில் சில எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கும். ஆனால் ஸ்டாம்ப் மட்டும்தான் விழும். ஆனால் என்ன எழுதியிருக்கும் என்று தெரியும். நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்பட்டுவருவதால் அதே வகையில் தான் இருக்கும் என்று தெரியும். அதேபோல் தமிழை முதலில் கொண்டு வந்துவிட்டால் 200, 300 ஆண்டுகளானாலும் சரி அந்த முறையே இருக்கும். அதிகாரிகளுக்கு அந்தளவிற்குப் பயிற்சி தர வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழில் நல்ல அறிவு பெற்றவர் கள் மெல்ல மெல்ல வந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் நல்ல முறையில் எழுதுகிறவர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர் களால் தமிழ் ஆட்சி மொழியாக விரைவில் நல்லமுறையில் பரவுகிற நிலை ஏற்படும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Certain areas have been recognised as minority language areas in this State. May I know whether such areas will be supplied with Kannada and Telugu typewriters?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த அரசைப் பொறுத்த வரையில் தமிழ், ஆங்கிலம் இரண்டும் ஆட்சி மொழி களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. குறிப்பிட்ட பகுதிகளில் இருப்பவர்கள் அதற்கான முறையில் தெலுங்கு அல்லது கன்னடத்தில் எழுதுவார்களானால் அங்கு அறிந்து கொள்கிற அளவிற்குத்தான் வருகின்றன. ஆனால் வருகிற கடிதங்கள், கடிதப்போக்குவரத்துக்கள் போன்றவை தமிழ் அல்லது ஆங்கிலம் இந்த இரண்டில்தான் இந்த அரசைப் பொறுத்தவரையில் நடைபெறுகிறது.

கோயம்புத்தூர் நகரமன்றத்தை மாநகராட்சியாக்கல்

* 443 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் நகர்மன்றம், சிங்காநல்லூர் நகர் மன்றம் பேரூர் ஊராட்சி ஒன்றியம், பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கவுண்டம்பாளையம் ஊராட்சி மன்றம், துடியலூர் பேரூராட்சி மன்றம் ஆகியவற்றை இணைத்து, கோயம்புத்தூர் மாநகராட்சி அமைக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இப்பொருள் குறித்த செயற்குறிப்பு அரசின் அல்லது மற்ற அலுவலகங்களின் பரிசீலனையில் இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. என். மருதாசலம் : கோயம்புத்தூருடன் சிங்காநல்லூர், சுற்றுப்புற கிராமங்களையும் சேர்த்து அதை ஒரு மாநகராட்சியாக ஏற்படுத்த அரசிற்கு உத்தேசமுண்டா? அப்படி ஏற்படுத்துவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதற்கு கோவை நகராட்சிமன்ற உறுப்பினர்களும் ஒப்புதல் அளிக்க வேண்டும். சுற்றிலுமுள்ள பேரூர், சிற்றூர் ஆட்சிமன்றங்களும் ஒப்புதல் அளிக்க வேண்டும். கோவையோடு சேருவதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். சிங்காநல்லூர், மற்றும் அங்குள்ள பேரூர், சிற்றூர் இவைகள் சேர்ந்தால் பெரும் செலவு ஏற்படும். இந்த நிலைகள் எல்லாம் ஆராயப்பட வேண்டும், அதோடு அவர்கள் ஒப்புதலும் வேண்டும். மாநகராட்சிமன்றமாகப் போதுமான அளவிற்கு மக்கள் தொகை இருக்க வேண்டும். வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, இவற்றைச் சொல்லி வற்புறுத்தி அப்படி மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படக்கூடும். அவர்கள் விருப்பத்தை அறிந்து செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் என்ன பலன்கள் ஏற்படுகின்றன என்பதையும் பார்க்க வேண்டும். தனித்தனியாகப் பிரித்து தாங்கள் ஒரு தனி பேரூராட்சி, தனி நகரமன்றம் என்று இருக்க வேண்டும் என்ற உணர்வு ஆங்காங்கு இருப்பதால் எளிதில் பெரு நகரத்தோடு தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட யாரும் முற்பட மாட்டார் கள், இன்றியமையாத அவசியத்தையொட்டி தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டாலொழிய.

திரு. கே. என். குமாரசாமி : கோவை நகரத்தினை ஒரு மாடல் நகரமாக உருவாக்குவதற்கு மத்திய அரசினிடம் தமிழக அரசு ஏதாவது கோரிக்கையை அனுப்பியிருக்கிறதா? 100 கோடி ரூபாய் திட்டத்தின் கீழ் அந்த நகரத்தை ஒரு மாடல் நகரமாக ஆக்குவதற்கு அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டியதில்லை. ஆனால் அப்படிப்பட்ட செயற் குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஆண்டு மே தினத்தில் மதுரை மாநகராட்சியாக மாறியது. அதேமாதிரி அடுத்த ஆண்டு மே தினத்தில் கோவையைப் போன்ற நகரங்களை மாநகராட்சி களாக்குவதற்கு ஏதாவது ஆலோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒவ்வொரு மே தினத்திலும் ஒவ்வொன்றையும் மாநகராட்சியாக ஆக்கவேண்டு மென்ற குறிப்பு இல்லை. மதுரையைப் பொறுத்தவரையில் அங்கு ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை பல்லாண்டுகளாக இருப்பதாலும், இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் இருப்பதாலும் மதுரை நகரம் மாநகரமாக மாற்றப்பட்டது. ஆனால் இப்போது அந்தப் பிரச்னை மற்றயிடங்களில் எழவில்லை. மக்கள் தொகை வளர்ந்து போதுமான நிதி வசதியும் அங்கு வளர்கிற காலத்தில் இவை கவனிக்கப்படவேண்டியதொன்று அது.

சீர்காழி பேரூராட்சியைத் தரம் உயர்த்தல்

*444 வினா—திரு. எஸ். வடிவேல் :

மாண்புமிகு கல்வி—உள்

திரு. சி. கணேசன் :

ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி பேரூராட்சியை நகராட்சியாக்கக் கோரி அப் பேரூராட்சியிலிருந்து தீர்மானம் போடப்பட்டு அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) சீர்காழி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும்படி அப் பேரூராட்சி லிருந்து தீர்மானம் ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனால் அப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. டி. வி. சம்பத் : தலைவரவர்களே, சீர்காழி பேரூராட்சி நகராட்சியாக மாற்றுவதற்கான எல்லா வசதி பொருந்தி இருந்தும், அந்தப் பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி அது அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தும், அதை நகராட்சியாக ஆக்கக் கூடாது என்று அந்த நகரத்திலிருந்து ஏதாவது தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் பேரூராட்சி நகராட்சியாக மாற்றுவதற்கான தகுதி பெற்று இருக்கிறது. மக்கள் தொகை 20,000-க்கு மேற்பட்டு இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அங்கே மக்கள் தொகை 20,000-க்கு மேற்பட்டு இருக்கிறது. வருமானம் ரூ. 1 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். அதேபோல், வருமானமும் ரூ. 3 லட்சத் திற்கு மேல் இருக்கிறது. எனவே, நகராட்சியாக்குவதற்கான தகுதியை சீர்காழி பெற்று இருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அது பற்றிய முடிவை அரசு விரைவில் எடுக்கும்.